செ.வெ.எண்: 53 நாள்: 22.3.2017

பத்திரிக்கைச் செய்தி

❁❁❁❁❁

மாண்புமிகு தமிழக முதலமைச்சர் அவர்கள் மக்களின் நலன் கருதி அற்புதமான “அம்மா திட்டம்” **(AMMA – Assured Maximum Service to Marginal People in All Villages)** என்ற திட்டத்தினை அறிவித்துள்ளார்கள். பொதுமக்கள் அரசு அலுவலகங்களுக்கு பயணம் செய்து நீண்ட நேரம் காத்திருந்து மனுக்களை அளிப்பதால் ஏற்படும் நேரம், செலவு மற்றும் பல்வேறு இன்னல்களை போக்குகின்ற வகையில் மக்கள் வசிக்கும் கிராமத்திற்கே வருவாய்த்துறை அலுவலர்கள் சென்று குறைகளை கேட்கும் வகையில் “**அம்மா திட்டம்**” செயல்படுத்தப்பட்டு வருகிறது.

அதனடிப்படையில், வாரம் ஒரு கிராமத்தில் **வெள்ளிக்கிழமை** அன்று வருவாய்த்துறை சார்பில் முகாமிட்டு, மக்கள் பிரதிநிதிகள் மற்றும் அனைத்து துறையைச் சார்ந்த அலுவலர்கள் பங்கேற்கும் வகையில் தமிழகம் முழுவதும் ஒவ்வொரு வருவாய் வட்டத்தில் மக்களைத் தேடி வருவாய்த்துறை மூலம் “**அம்மா திட்டம்**” செயல்படுத்தப்பட்டு வருகிறது.

திருநெல்வேலி மாவட்டத்தில் 4–வது கட்ட “அம்மாதிட்ட முகாம்” திருநெல்வேலி, செங்கோட்டை, தென்காசி, சிவகிரி ,வீரகேரளம்புதூர், மானூர், சேரன்மகாதேவி, ஆலங்குளம், இராதாபுரம், சங்கரன்கோவில், நான்குநேரி, அம்பாசமுத்திரம், திருவேங்கடம், கடையநல்லூர் மற்றும் பாளையங்கோட்டை ஆகிய 15 வட்டங்களிலுள்ள அனைத்து கிராமங்களிலும் 4–வது கட்டத்திற்கான அம்மா திட்ட முகாம் தொடர்ந்து வரும் வெள்ளிகிழமை **24.03.2017** அன்று கீழ்கண்டவாறு தெரிவிக்கப்பட்டுள்ள வட்டத்தில் உள்ள கிராமங்களில் “அம்மா திட்ட முகாம்” நடைபெற தேர்வுசெய்யப்பட்டுள்ளது.

| வரிசை எண் | வட்டம் | குறுவட்டம் | வருவாய்கிராமம் |
|---|---|---|---|
| 1. | திருநெல்வேலி | மதவக்குறிச்சி | புதூர், உகந்தான்பட்டி |
| 2. | இராதாபுரம் | லெவிஞ்சிபுரம் | இருக்கன்துறை பகுதி-1 மற்றும் பகுதி-2 |
| 3. | அம்பாசமுத்திரம் | ஆழ்வார்குறிச்சி | சிவசைலம் |
| 4. | நான்குநேரி | மூலக்கரைப்பட்டி | அரியக்குளம் |
| 5. | சேரன்மகாதேவி | முக்கூடல் | முக்கூடல் |
| 6. | பாளையங்கோட்டை | முன்னீர்பள்ளம் | விளாகம் |
| 7. | மானூர் | தாழையூத்து | சித்தார்சத்திரம் |

| | | | |
|---|---|---|---|
| 8. | சங்கரன்கோவில் | குருக்கள்பட்டி | கீழநீலிதநல்லூர் |
| 9. | திருவேங்கடம் | பழங்கோட்டை | கே.ஆலங்குளம் |
| 10. | தென்காசி | தென்காசி | புலியூர் |
| 11. | செங்கோட்டை | பண்மொழி | மேக்கரை |
| 12. | வீரகேரளம்புதூர் | ஊத்துமலை | வடக்குக்காவலாக்குறிச்சி |
| 13. | ஆலங்குளம் | நெட்டூர் | நெட்டூர் |
| 14. | சிவகிரி | கூடலூர் | அரியூர் |
| 15. | கடையநல்லூர் | ஆய்குடி | இடைக்கால் |

மேற்கண்ட கிராமங்களில் 24.03.2017 அன்று நடைபெறவுள்ள "அம்மா திட்டத்தின்" போது பொது மக்கள் கீழ்க்கண்ட தங்களது கோரிக்கைகள் தொடர்பாக மனுக்களை அளிக்கலாம். இலவச வீட்டுமனைப் பட்டாக்கள், 2. முதியோர் உதவித்தொகை உள்பட சமூக பாதுகாப்புத் திட்டங்கள், 3. பட்டா மாறுதல்கள், 4. உழவர் பாதுகாப்பு அட்டைகள், 5. பிறப்பு, இறப்பு சான்றிதழ்கள், 6. சாதி சான்றிதழ்கள், 7. இருப்பிட சான்றிதழ்கள், 8. வருமான சான்றிதழ்கள், 9. நிலத்தாவாக்கள் 10. குடும்ப அட்டை,11. சாலை வசதிகள் மற்றும் குடிநீர் வசதி போன்றவைகள் தங்களது கிராமத்திற்கு கிடைத்திடும் வகையில் , வருவாய்த்துறை மக்களுக்கு ஆற்றி வரும் சேவையை துரிதப்படுத்தப்பட்டு மக்கள் பயனடைய இதன் மூலம் வழிவகை செய்யப்படுகிறது. எனவே, பொதுமக்கள் இம்முகாமில் தகுந்த ஆவணங்களுடன் தங்கள் கோரிக்கை குறித்த மனுக்களை அளித்து பயன் பெறுமாறு மாவட்ட ஆட்சித் தலைவர் கேட்டுக் கொள்கிறார்.

வெளியிடு:
செய்தி மக்கள் தொடர்பு அலுவலகம்,
திருநெல்வேலி.

மாவட்ட ஆட்சித் தலைவர்,
திருநெல்வேலி.

21/3/17

21-3-17